# பிரதமர் பெயரால் அமைந்த திட்டங்களுக்கே 50 விழுக்காட்டுக்கு மேல் மாநில அரசுதான் நிதி ஒதுக்கீடு செய்கிறது!

## சேலத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

ஐந்தாவது அறிவிப்பு சங்ககிரி நகராட்சியில் புதிய வணிக வளாகம் அமைக்கப்படும்.

ஆறாவது அறிவிப்பு தாரமங்கலம் நகராட்சியில் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் இடைப்பாடி நகராட்சியில் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் ஆத்தூரில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் புதிய குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**பயன் பெற்றவர்கள் பட்டியல்! நெஞ்சை நிமிர்த்தி சொல்ல முடிகிறது!**

தூரத்தில் இருக்கும் இலக்குகளையும், விரைவாக அடைவதற்கான பாதையை நாம் அமைத்துகொண்டு இருக்கிறோம்! அதனால் தான், ஒவ்வொரு மாவட்டத்திலும் நம்முடைய ஆட்சியில் பயன்பெற்றவர்களின் பட்டியலை புள்ளிவிவரத்தோடு என்னால் நெஞ்சை நிமிர்த்தி சொல்ல முடிகிறது!

மகளிருக்கு, மாணவிகளுக்கு, மாணவர்களுக்கு மாதம், மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டு வருகிறோம். நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் இந்த முத்திரைத் திட்டங்களால் சேலம் மாவட்டத்தில் மட்டும் பயனடைந்தவர்களின் விவரங்களை சொல்ல வேண்டும் என்றால்,

- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் 5 இலட்சத்து 58 ஆயிரம் மகளிர்.
- புதுமைப்பெண் திட்டத்தில் 59 ஆயிரம் மாணவிகள்
- தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 18 ஆயிரம் மாணவர்கள்
- வீட்டிற்கே சென்று சிகிச்சை அளிக்கும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 29 இலட்சம் முறை சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது.
- 86 ஆயிரம் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டத்தில் சூடாகவும், சுவையாக வும் உணவு பரிமாறுகிறோம்!
- கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைப்பு திட்டத்தில் 2 இலட்சம் விவசாயிகள் பலன் பெற்றிருக்கிறார்கள்!
- நான் முதல்வன் திட்டத்தில் 4 இலட்சம் இளைஞர்கள் திறன் பயிற்சிகள் பெற்றிருக்கிறார்கள்.
- தமிழ்நாடு முழுவதும் 3 ஆயிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறோம். அதில், சேலம் மாவட்டத்தில் மட்டும் 56 கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. இப்படி நம்முடைய சாதனைகளை நாள் முழுவதும் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

இதன் தொடர்ச்சியாகதான், இந்த விழாவில், 17 அரசுத் துறைகளைச் சேர்ந்த திட்டங்களின் மூலமாக, ஒரு இலட்சத்து ஆயிரத்து 203 பயனாளிகளுக்கு 204 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது! இப்படி அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று, நலத்திட்ட உதவிகளை நான் தொடர்ந்து வழங்கிக் கொண்டு வருகிறேன். தினமும் செய்திகளில் நீங்கள் பார்த்திருப்பீர்கள்... காலையில் ஒரு ஊரில் நலத்திட்ட உதவிகள் வழங்கியிருப்பேன்.. மாலை யில், இன்னொரு ஊரில் வேறு ஒரு நிகழ்ச்சியில் மக்களைச் சந்தித்துக்கொண்டு இருப்பேன்.

**உங்களில் ஒருவராக அன்பைப் பொழிகிறீர்கள்!**

சென்னையில் இருக்கும் நாட்களில், அங்கு நடக்கும் திட்டங்களைத் தொடங்கி வைப்பது, நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்களை ஆய்வு செய்வது, புதிய திட்டங்களை வகுக்க ஆய்வுக் கூட்டங்களை நடத்துவது, பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு பணியாணைகள் வழங்குவது, நேரில் போக முடியாத திட்டங்களை எல்லாம் தலைமைச் செயலகத்தில் இருந்தே, காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைப்பது என்று தொடர்ந்து மக்களான உங்களுக்காகத்தான் உழைத்துக்கொண்டு இருக்கிறேன். அதனால் தான், நான் எங்கு சென்றாலும், அன்போடு, உறவோடு, உரிமையோடு நீங்கள் என்னை வரவேற்கிறீர்கள்... முதலமைச்சராக மட்டும் என்னை பார்க்காமல், உங்களில் ஒருவராக, உங்கள் நம்பிக்கைக்கு உரியவனாக பார்க்கிறீர்கள். அன்பைப் பொழிகிறீர்கள்.

இதையெல்லாம் சிலரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை... தி.மு.க. அரசின் செல்வாக்கைப் பார்த்து வயிறு எரிகிறார்கள்.. சில நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் மதுரைக்கு வந்தார்... அவர் அரசியலை மட்டும் பேசிக் கொண்டு சென்றிருந்தால் இங்கு நான் பதில் பேசியிருக்க மாட்டேன். அரசியல் கூட்டத்தில் பேசியிருப்பேன். ஆனால் ஆட்சியில் குறை சொல்லி, எதுவும் செய்யவில்லை எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற வில்லை - சும்மா வெறும் அறிவிப்புகளாகத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற விமர்சனம் செய்து விட்டுப் போயிருக்கிறார். அதனால், கட்டாயத்தின் அடிப்படையில் நான் அதற்கு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

அமித்ஷா அவர்களின் பேச்சிலேயே தன்னுடைய ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்திருக்கிறார்! “ஒன்றிய பா.ஜ.க. அரசு அளிக்கும் திட்டங்களை மடைமாற்றி, மக்களுக்கான நன்மைகளை கிடைக்கவிடாமல் செய்கிறது தி.மு.க. அரசு” என்று அவர் பேசியிருக்கிறார்! ஆனால், உண்மை என்ன? குடிநீர்த் திட்டமாக இருந்தாலும் சரி, வீடு கட்டும் திட்டமாக இருந்தாலும் சரி, ஒன்றிய அரசு ஒதுக்கும் பணத்தை வைத்துச் செயல்படுத்த முடியாது என்று மாநில அரசுதான் கூடுதல் பணம் வழங்குகிறது. பிரதமரின் பெயர் வைத்திருக்கும் திட்டங்களுக்கே 50 விழுக்காட்டுக்கு மேல் மாநில அரசுதான் நிதி ஒதுக்கீடு செய்து அதை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

**ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு நாம் நிதி வழங்குகிறோம்!**

நீங்கள் எல்லாம் படையப்பா சினிமா பார்த்திருப்பீர்கள்.. அதில் ஒரு காட்சி வரும் “மாப்பிள்ளை அவர்தான், ஆனால், அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது” என்று அதில் ஒரு டயலாக் வரும். அதுபோல்தான் ஒன்றிய அரசு பெயரிலான திட்டங்களுக்கும் நாம் நிதி வழங்கிக் கொண்டு வருகிறோம்! இந்த நிலையில் எந்த அடிப்படையில் நாம் மடைமாற்றம் செய்கிறோம் என்று உள்துறை அமைச்சர் குற்றம் சாட்டுகிறார்?

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ஒன்றிய பா.ஜ.க. அரசுதான், தமிழ்நாட்டிற்கான எந்த சிறப்புத் திட்டத்தையும் தராத அரசு... மிகச் சில திட்டங்களுக்கு ஒதுக்கும் பணமும் முழுமையாக வந்து சேருவது இல்லை... ஆனால், உள்துறை அமைச்சர் அப்படியே பிளேட்டை திருப்பிப் போடுகிறார்!

**மதுரை எய்ம்ஸ் என்ன நிலையில் இருக்கிறது!**

நான் கேட்கிறேன்... மாண்புமிகு திரு. அமித்ஷா அவர்களே... மதுரை வந்தீர்களே.. பத்து ஆண்டுக்கு முன்பு உங்கள் அரசு அறிவித்த மதுரை எய்ம்ஸ் என்ன நிலையில் இருக்கிறது என்று சென்று பார்த்தீர்களா? அதே மதுரையை சுற்றி, நாம் ஆட்சிக்கு வந்த இந்த 4 ஆண்டுகளில், கலைஞர் நூற்றாண்டு நூலகம், உலகத் தரத்திலான ஜல்லிக்கட்டு அரங்கம், கீழடி அருங்காட்சியகம் என்று ஏராளமான பணிகளை நாங்கள் முடித்திருக்கி றோம்... இது தான் BJP மாடலுக்கும், திராவிட மாடலுக்கும் உள்ள வித்தியாசம்!

பத்தாண்டுகளாக தொடர்ந்து கட்டிக் கொண்டிருப்பதற்கு, அது எய்ம்ஸ் மருத்துவமனையா? இல்லை, விண்வெளி ஆராய்ச்சி நிலையமா? ஒழுங்காக நிதி ஒதுக்கியிருந்தால் இரண்டே ஆண்டுகளில் கட்டி முடித்திருக்க லாமே? இந்த இலட்சணத்தில் தமிழ்நாட்டை குறை சொல்லி நீங்கள் பேசலாமா?

ஒன்றே ஒன்றைக் கேட்கிறேன்... மூன்றாவது முறையாக ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைத்திருக்கிறீர்கள்... தமிழ்நாட்டுக்கு என்று நீங்கள் செய்த ஒரே ஒரு சிறப்புத் திட்டத்தை சொல்லுங்கள்... 9 ஆண்டுகள் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் நாங்களும் இடம் பெற்றிருந்தோம். எங்களின் சாதனைகளை நான் பட்டியல்போட்டு பலமுறை சொல்லியிருக்கிறேன் - சட்டமன்றத்திலும் பலமுறை பதிவு செய்திருக்கிறோம்.

**சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்!**

ஆனால், நீங்கள் ஆட்சிக்கு வந்த 11 ஆண்டுகளாக, நீங்கள் தமிழ்நாட்டிற்கு என்ன செய்தீர்கள்? என்று கேட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆனால், அதை மட்டும் சொல்லவே மாட்றீங்களே... சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்! இந்த நிலைமையில், 2004ஆம் ஆண்டு காலகட்டத்தையும், 2025ஆம் ஆண்டையும் ஒப்பிட்டு பேசியிருக்கிறீர்கள். அன்றைக்கு இருந்த பட்ஜெட் என்ன? இப்போது இருக்கக்கூடிய பட்ஜெட் என்ன? அன்றைக்கு தங்கம் ஒரு பவுன் 5 ஆயிரம் ரூபாய்.. ஆனால், இன்றைக்கு 71 ஆயிரம் ரூபாய்! 2004ஆம் ஆண்டு பணமும், இப்போது இருக்கக்கூடிய பணமும் ஒன்றா?

மதுரைக்கு வந்த அமித்ஷா இப்படி பேசினால், மதுரையின் தொன்மையை நிராகரிப்பது போல பேசியிருக்கிறார் இன்னொரு ஒன்றிய அமைச்சரான ஷெகாவத் அவர்கள். என்ன பேசினார்? கீழடியில் உள்ள அள்ள அள்ள குறையாமல் அத்தனை சான்றிதழ்களை கண்டுபிடித்து அறிவியல் ஆய்வு அடிப்படையில் எழுதப்பட்ட ஆய்வறிக்கையை திருத்த வேண்டும் என்று சொல்கிறார். தமிழ்நாட்டில் இரும்பின் தொன்மையை பற்றி உலகளாவிலான ஆய்வகங்களில் சோதனைக்குட்படுத்தி நாம் தான் முதல் ரிசல்ட்டை வெளியிட்டோம். அப்போதாவது அவர்கள் பாராட்டினார்களா? பாராட்டக்கூட வேண்டாம் atleast அந்த முடிவுகளை அங்கீகரித்து ஒரு வார்த்தையாவது பேசினார்களா? தமிழர்களுடைய தொன்மைகளை மறைக்கவும், அழிக்கவும் ஒன்றிய அரசு தொடர்ந்து முயற்சி செய்கிறது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடியவர் இதையெல்லாம் எதிர்த்துக் கேள்வி கேட்பதற்கு துணிச்சல் இல்லாமல், அவர்களுடன் கூட்டணி வைத்துக் கொண்டு, டில்லிக்கு தலையாட்டி பொம்மையாக பத்திரிகையாளர்கள் சந்திப்பில், அவர்கள் அருகில் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.

இப்படி தமிழுக்கும், தமிழினத்திற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் எதிரான அத்தனை சிந்தனைகளையும் வைத்துக்கொண்டு தமிழ்நாட்டை புறக்கணிப்பதால்தான் தமிழ்நாட்டு மக்களும் இவர்கள் கூட்டணியை நிச்சயமாக புறக்கணிக்கிறார்கள் - புறக்கணித்துக் கொண்டே இருப்பார்கள்.

**மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்!**

நான் கேட்பது, உங்களுடைய பதவியைக் காப்பாற்றிக்கொள்ள ஏற்கனவே ஒருமுறை வெளிப்படையாக கூட்டணி வைத்தீர்கள். தமிழ்நாட்டிற்கான ஒரு சிறப்புத் திட்டத்தை யாவது அப்போது கேட்டு பெற்றீர்களா? இல்லை, தமிழ்நாட்டின் உரிமைகள் பறிபோனபோது எதிர்த்து ஒரு கேள்வி கேட்டீர்களா? கேட்கவில்லை. தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் ‘ப்ராக்சி’ ஆட்சி நடந்தபோதும் எதிர்த்து குரல் எழுப்பவில்லை. இப்போதும், தமிழ்நாட்டில் அடுத்து பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று அமித்ஷாவும், மற்றவர்களும் நேரடியாகவே சொல்கிறார்கள். அதைப் பார்த்தும் எதையும் பேசமுடியாமல் வாய்மூடி இருக்கிறார்கள். சுயநலத்திற்காக, சுயலாபத்திற்காக சொந்தக் கட்சியையே அடமானம் வைத்தபிறகு எப்படி பேசமுடியும்? ஆனால், மக்கள்தெளிவாக இருக்கிறார்கள். மீண்டும் அவர்கள் உங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் உங்களிடம் ஏமாறமாட்டார்கள்.

**சுய மரியாதை உள்ளவர்கள தமிழர்கள்!**

சுயமரியாதை உள்ளவர்கள் தமிழர்கள்! நான் உறுதியோடு சொல்கிறேன். டெல்லியிலிருந்து தமிழ்நாட்டை ஆள நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்! நெருக்கடிகளை மீறி நெருப்பாற்றில் நீந்தி தமிழ்நாட்டை உயர்த்தி வரக்கூடிய திராவிட மாடல் அரசுக்கு ஆதரவாக மக்கள் இருக்கிறீர்கள்! இப்போது இருப்பதுபோலவே 2026லும் நீங்கள் ஆதரவாக இருப்பீர்கள். எப்போதும் நாங்கள் உங்களுக்கு துணையாக இருப்போம், இருப்போம் என்று கூறி விடைபெறுகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### சேலம் மாவட்டத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியின் சாதனைகள்!

**சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், கழக அரசு எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் ஏராளமான சாதனைகளை செய்திருக்கிறோம். அதில், முக்கியமான சிலவற்றை மட்டும் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டும் என்றால்,**

- **சேலம் உருக்காலை**
- **ஐம்பது ஆண்டு கனவுத் திட்டமான சேலம் இரயில்வே கோட்டம்**
- **பெரியார் பல்கலைக்கழகம்**
- **சேலத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி**
- **ஆத்தூரில் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி**
- **சேலம் மாநகராட்சிக்காக காவிரி தனி கூட்டுக் குடிநீர் திட்டம்**
- **சேலம் மாநகரத்திற்கு பாதாளச் சாக்கடைத் திட்டம்**
- **திருமணி முத்தாறு - வெள்ளக்குட்டை ஓடையை தூய்மைப்படுத்த திட்டம்**
- **ஏத்தாப்பூரில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம்**
- **ஏற்காட்டில் தாவரவியல் பூங்கா**
- **9 உழவர் சந்தைகள்**
- **சேலம் ஆத்தூர் குடிநீர்த்திட்டம்**
- **புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம்**
- **சேலம் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம்**
- **ஆத்தூர், சங்ககிரி, ஓமலூர் பகுதிகளில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள்**
- **மேட்டூரில் 600 மெகாவாட் அனல் மின் திட்டம்**
- **சேலம் - கிருஷ்ணகிரி நான்கு வழிச்சாலை**
- **சேலம் - நாமக்கல் நான்கு வழிச்சாலை**
- **சேலம் - செங்கப்பள்ளி நான்கு வழிச் சாலை**
- **பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானச் சேவை மீண்டும் தொடக்கம்**

**இப்படி கணக்கற்ற திட்டங்களை சேலம் மாவட்டத்திற்கு கொண்டு வந்து நிறைவேற்றிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி; நம்முடைய கலைஞரின் ஆட்சி!**

### சேலம் மாவட்டத்திற்கு 2021க்குப் பிறகு கழக ஆட்சியின் சாதனைகள்!

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், கடந்த 4 ஆண்டுகளில், 7 ஆயிரத்து 660 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும், 22 ஆயிரத்து 117 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், சேலம் மாவட்டத்திற்கு நாம் செய்திருக்கிறோம்! அதில் சிலவற்றை நாம் பட்டியலிட்டு சொல்ல வேண்டும் என்றால்...**

- **மினி டைடல் பார்க் அறிவித்தோம்; ஓமலூர் வட்டம், ஆணைக் கவுண்டன்பட்டியில் அமைத்துவிட்டோம்!**
- **கொலுசு உற்பத்தியாளர்களுக்கான பன்மாடி உற்பத்தி மையம் அமைக்கப்படும் என்று அறிவித்தோம்; அரியாக்கவுண்டன்பட்டியில் திறந்து வைத்துவிட்டோம்!**
- **மூன்று நீர்நிலைகளைச் சீரமைக்க 52 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தோம்; அல்லிக் குட்டை ஏரியை திறந்து வைத்துவிட்டேன். போடிநாயக்கன்பட்டி ஏரியும், மூக்கனேரி ஏரியும் விரைவில் திறந்து வைக்கப்படும்.**
- **அம்மாபேட்டை பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும் என்று சொன்னோம்; 92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட இரயில்வே பாலத்தை கடந்த ஆண்டு திறந்து வைத்துவிட்டோம்.**
- **தங்கு தடையின்றி குடிநீர் கிடைக்க 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கக் கூடிய பணிகள் நடைபெற்று வருகிறது. அதே போன்று, வடிகால் பணிகளும் முடிந்துவிட்டது.**
- **ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்று சொன்னேன்; ஜாகீர் அம்மா பாளையத்தில், 119 ஏக்கர் பரப்பளவில் 880 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க இன்றைக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன்!**
- **548 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 520 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.**
- **பல்நோக்கு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்தோம்; ஏற்கனவே, துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் அதை அடிக்கல் நாட்டி இருக்கிறார். இப்படி சொன்னால், சொன்னதை செய்து முடிக்கும் ஆட்சியாக, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறோம்!**

### சேலம் மாவட்டத்திற்கு 6 புதிய அறிவிப்புகள்!

**சேலம் மாவட்டத்திற்கு 6 புதிய அறிவிப்புகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

முதலாவது அறிவிப்பு: **சேலம் மாநகராட்சி பகுதிகளில், 100 கோடி ரூபாய் செலவில் சாலைகள் மேம்பாடு, போதிய கழிவுநீர்க் கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.**

இரண்டாவது அறிவிப்பு: **சேலம் மாநகராட்சி செவ்வாய்ப்பேட்டையில் இருக்கும் தினசரி சந்தை 9 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப் படும்.**

மூன்றாவது அறிவிப்பு: **தலைவாசல் வட்டத்தில் விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் இலுப்பநத்தம் கிராமத்தில் இருக்கும் வேளாண் விற்பனை நிலையம் 10 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.**

நான்காவது அறிவிப்பு: **மேட்டூர் மற்றும் நரசிங்கபுரத்தில் புதிய நகராட்சி அலுவலக கட்டடங்கள் கட்டப்படும்.**

ஐந்தாவது அறிவிப்பு: **சங்ககிரி நகராட்சியில் புதிய வணிக வளாகம் அமைக்கப்படும்.**

ஆறாவது அறிவிப்பு: **தாரமங்கலம் நகராட்சியில் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் இடைப்பாடி நகராட்சியில் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் ஆத்தூரில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் புதிய குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

---

# காவிரி டெல்டா பாசனத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தண்ணீர் திறப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

குடிநீர் பயன்பாட்டிற்காக ஆண்டு முழுவதும் எடுத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 40க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கும் மற்றும் குடிநீர் பயன்பாட்டிற்கும் தண்ணீர் திறந்துவிடப்படும் பொழுது அணை மின்நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும் மற்றும் சுரங்க மின்நிலையம் மூலம் 200 மெகாவாட் மின்சாரமும், என மொத்தம் 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அணையின் கீழ்பகுதியில் 30 மெகாவாட் வீதம் 7 கதவணை நீர்மின் நிலையங்கள் மூலம் மொத்தம் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேட்டூர் அணை கட்டப்பட்ட நாள் முதல் குறுவை சாகுபடிக்கு 20வது முறையாக பாசன விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட ஜீன்12 அன்று காவிரி டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பாசன தேவையை பொறுத்து அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் அளவினை உயர்த்தியும் குறைத்தும் வழங்கப்படும்.

நடப்பாண்டில் காவிரி டெல்டா விவசாய பெருங்குடி மக்கள் அனைவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தவும், நீர்பங்கீட்டில் நிலைமைக்கேற்ப தண்ணீரை முறைவைத்துப் பயன்படுத்த நீர்வளத்துறை அலுவலர்களுடன் ஒத்துழைக்குமாறும், மிக அதிக அளவு மகசூல் பெற்று பயனடையுமாறும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாய பெருமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவ சங்கர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம். செல்வ கணபதி,

மலையரசன், ஆ.மணி, சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், சேலம் மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், துணை மேயர் திருமதி. சாரதா தேவி, நீர்வளத் துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ச.ரமேஷ், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் ஆர். தயாள குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயி பெருங்குடி மக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.